**திஸ்ஸமஹாராம பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 தேறிய சொத்துக்களில் குறைவு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 128,413,548 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 118,900,500 ஆகும். அதன்படி தேறிய சொத்துக்களின் குறைவு ரூபா 9,513,048 ஆக இருந்தது.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குரிய கல்குவாரியை குத்தகைக்கு வழங்கியதற்காக 2013 செப்தெம்பர் 26 ஆந் திகதி முதல் திசெம்பர் 26 ஆந் திகதி வரையிலான காலத்தில் உரிய குத்தகையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 203,280 குத்தகைத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணங்களுக்குரியதாக கிடைத்த ரூபா 37,857,420 கூட்டுத்தொகையான மூலதன வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக 3/81 வருமான விடயத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) நானாவித வைப்புக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் அந்தக் கணக்கில் ரூபா 478,833 தொகையான வரவு மீதியொன்று காணப்பட்டது.

(ஈ) 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணங்களுக்காக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 40,128,852 கூட்டுத்தொகையொன்று மீளாய்வாண்டின் மூலதனச் செலவினமாக 309 செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரியதாகக் கிடைக்கவேண்டிய ரூபா 226,585 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,223,285 ஆக இருந்த போதிலும் ரூபா 2,425,230 தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

iii. மீளாய்வாண்டின் போது கிடைத்த 2009 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டண வருமானங்களில் ரூபா 97,347 தொகை ஆண்டின் வருமானத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 5,280,565 பெறுமதியான 10 நிலையன சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 625,000 தொகையான 53-5719 ஆம் இலக்க இரு நோக்க கார் வாகனத்திற்குப் பதிலாக 56-1099 ஆம் இலக்க கெப் வண்டி மாற்றப்பட்டிருந்த போதிலும் இரு நோக்க கார் வாகனத்தின் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தில் நிர்மாணங்களுக்காக ஆண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய ரூபா 1,830,999 தொகையும், ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,223,818 தொகையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 539,970 கூட்டுத்தொகையான வருமானம் ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2013 ஆம் ஆண்டிற்குரிய 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 142,714 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினத்திலும் கடன்கொடுத்தோரிலும் கைவிடப்பட்டிருந்தன

(ஓ) 03 நிலையான வைப்புக் கணக்குகளுக்காக ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 224,752 தொகையான வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய கடன் மற்றும் வட்டி ரூபா 7,552,339 கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்தின் பெறுமதி ரூபா 3,377,513 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின்படியான பெறுமதிக்கும் உபயோகப் பதிவேடுகளின் படியான பெறுமதிக்கும் இடையே ரூபா 180,865 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டத்தின் மூலம் பிரதேச சபைக்கு இரண்டு மாடி கடைத்தொகுதியையும் வீதியையும் நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட கடன் பணம் உள்நாட்டுக் கடன் மற்றும்

அபிவிருத்தி நிதியத்திற்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வட்டி வருமானம் செலுத்துதல் 2005 செப்தெம்பர் இலும் தவணைப்பணம் செலுத்துதல் 2007 செப்தெம்பர் மாதத்திலும் ஆரம்பிக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன் மற்றும் வட்டி செலுத்தி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் எந்தவித வட்டிப் பணமோ அல்லது கடன் தவணைப் பணமோ செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வட்டி ரூபா 28,439,716 ஆக இருந்ததுடன் தவணைப்பணம் ரூபா 21,352,693 ஆகும். அதன்படி செலுத்த வேண்டிய மொத்தப் பணம் ரூபா 49,792,409 ஆக இருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 57,970,426 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தேவையான பட்டோலைகள், நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 55,220 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 5,615,095 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 1,955 | 2,357 | 3,543 |
| ii. | வாடகை | 7,014 | 7,538 | 1,142 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 16,050 | 8,513 | 183 |
| iv. | ஏனைய வருமானம் | 48,586 | 33,380 | 3,015 |

### 2.2.2 ஆதன வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதன வரி ரூபா 3,567,629 இனை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 33 இன் படி ஆதன வரி செலுத்துவதிலிருந்து புறக்கணிக்கின்ற நபர்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்டகாலமாக ஆதனவரி செலுத்துவதிலிருந்து புறக்கணித்திருந்த 13 வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 369,486 தொகையான நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 பன்னேகமுவ வாராந்த சந்தை**

2012 ஆம் ஆண்டிற்காக அறவிடவேண்டிய நிலுவைப் பணம் ரூபா 51,870 ஆக இருந்ததுடன் அந்தப் பணம் செலுத்தாதிருக்கும் போது 2013 ஆம் ஆண்டிற்காகவும் அந்த வாடகையாளருக்கே வாராந்த சந்தை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 59,190 ஆகும்.

**2.2.4 கடை வாடகை**

பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகளிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகைப் பணம் ரூபா 1,142,895 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

04 இடங்களில் அமைந்துள்ள 32 கடைகளின் வாடகையாளர்களினால் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தாக வருமானக் கட்டுப்பாட்டாளரினால் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மாதாந்த பற்றுச்சீட்டிடல் நிறுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 திசெம்பர் 06 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 385,527 தொகையான நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானம் ரூபா 179,397 தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 147(7) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் ரூபா 2,792,293 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பிரதேச சபையின் மூலம் மீளாய்வாண்டின் போது 05 முன் பள்ளிப்பாடசாலை ஆசிரியர்களும், ஓட்டுனர் ஒருவரும் நியமிக்கப்பட்டு 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சம்பளம் மற்றும் படிகள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் ஊழியர் சேமலாப நிதியங்களுக்காக ரூபா 410,604 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இந்த நியமனத்திற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(1) ஆம் பிரிவின்படி உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறபட்டிருக்கவில்லை.

ii. ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் படி அரசாங்க ஊழியர் சேமலாப நிதிய நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர் நியமனத்திற்காக ஊழியர் சேமலாப நிதிய நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

iii. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 30 ஆந் திகதிய DMS/D3/97/27/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் முன் பள்ளிப் பாடசாலை உதவியாளர் பதவியை ஏற்படுத்தாதிருப்பதற்கும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உதவியாளர்களை ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் அந்த பதவியை கலைப்பதற்கும் கொள்கைரீதியான தீர்மானத்திற்கு உடன்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 தகைமைச் சான்றிதழ் விநியோகிக்காமை

1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபை (திட்டமிடல் மற்றும் கட்டிடம்) கட்டளை இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சபையினால் நிர்மாண நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தின் திட்டத்திற்கான நிர்மாணித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டு தகைமைச் சான்றிதழ் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2011 முதல் 2013 நவம்பர் வரை 218 கட்டிடத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 02 திட்டங்களுக்காக மாத்திரம் தகைமைச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது.

### 3.2.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 இன்படி கூறுவிலை கோரப்படாமல் சபையினால் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 423,920 தொகையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவின் படி ரூபா 250,000 இற்கு குறைந்த கொள்வனவுகளுக்காக ஆகக் குறைந்தது 03 கூறுவிலைகளும், ரூபா 250,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக ஆகக்குறைந்தது 05 கூறுவிலைகளும் பெறப்படவேண்டியிருந்த போதிலும் 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,486,175 கூட்டுத்தொகையான கொள்வனவுகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 தண்ணீர் பவுசரை பழுதுபார்த்தல்

227-5807 ஆம் இலக்க தண்ணீர் பவுசரை பழுதுபார்ப்பதற்காக 2013 சனவரி 09 ஆந் திகதி ரூபா 697,025 தொகையும், 2013 பெப்ரவரி 01 ஆந் திகதி ரூபா 233,775 தொகையுமாக ரூபா 930,800 கூட்டுத்தொகை தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் பழுதுபார்த்தலை மேற்கொண்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

ii. பழுதுபார்த்தல் மேற்கொண்ட நிறுவனத்திலிருந்து 2012 யூலை 01 ஆந் திகதி கூறுவிலை பெற்றுகொண்ட போது "பழுதுபார்த்தல் அவ்வப் போது தேவையான மட்டத்தில் காணப்பட்ட பழுதுபார்த்தல்களுக்காக கூறுவிலை சமர்ப்பித்தல்" ஆகக் காண்பிக்கப்பட்டு ரூபா 233,775 தொகையான மேலதிக கூறுவிலை 2012 யூன் 20 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நிறுவனத்திலிருந்தே அனுப்பப்பட்டிருந்தது. இதன்படி தண்ணீர் பவுசர் பழுதுபார்த்தல்களுக்காக 2012 யூலை 01 ஆந் திகதி கூறுவிலை

வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முன்னரே பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் கூறுவிலை கோரப்பட்டதன் பின்னரே அது ஏற்படுத்தப்பட்டமையும் தெளிவாகின்றது.

**3.2.4 முற்பணம்**

-----------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 168,649 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பின்வரும் சொத்துக்கள் நீண்டகாலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது 2003 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. இல.37-6092 உழவு இயந்திரம்
ii. தையல் உபகரணம்
iii. இரண்டு மோட்டார் படகுகள்
iv. உடற்பயிற்சி உபகரணங்கள்
v. உள்ளக இணைப்பு கொங்கிரீட் சிறுகல் உற்பத்தி இயந்திரம்

(ii) சபையினால் ரூபா 407,529 தொகை செலவில் 2004 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட கிரிந்த கொடான தகவல் நிலையம் அந்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாதிருந்தமை 2013 திசெம்பர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) இடர் முகாமைத்துவ நிலையத்திலிருந்து சபைபக்குக் கிடைத்த உபகரணமொன்று கட்டுவன பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் உபகரணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு 2014 யூன் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் கடன் நிர்வாகம்